மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தாலுக்காவைப் பொறுத்தவரையில் தான் குறிப்புகள் இருக்கின்றன. மற்றவற்றிற்கு தனிக் கேள்வி தான் போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 44 முதல் 47 வரை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் வேண்டு கோளுக் கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

மதுரையில் மனநோய் மருத்துவமனை அமைத்தல்.

*48—(*வினா எண். 3345)* **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** *(பேரவைத் துணைத் தலைவர்) :* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் மனநோய் மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அப்பணி தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது ஏதும் அரசின் பரிசீலனை யில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் மனநோய் மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை என்று சொன்னார்கள். தென் மாவட்டங்களிலிருந்து இதற்காகச் சிகிச்சை பெற வருகின்ற மக்களுக்கு தங்கி சிகிச்சை பெற வசதி வேண்டுமென்றால் அவர்கள் சென்னைக்குத்தான் வரவேண்டி இருக்கிறது. எனவே, விரைவில் இத்தகைய மருத்துவமனை ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ? அதற்கு காலதாமதம் ஆகும் என்றால் ராஜாஜி மருத்துவமனையிலாவது, மனநோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கு உதவுகின்ற வகையில் ஒரு தனிப்பிரிவை உடனே உருவாக்க அரசு முயற்சி களை மேற்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் ஒரு மனநோய் மருத்துவமனை ஆரம்பிப் பது குறித்து 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதற்பட்டியலில் சேர்க்கப்பட்டு பின் பொருளாதார வரம்பு விதித்ததன் காரண மாக கைவிடப்பட வேண்டிய நிலைமை வந்தது. எனவே

1987 மார்ச் 4]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையைப் பற்றிப் பரிசீலிக்கலாம். இதைப் பொறுத்தவரையில் ராஜாஜி மருத்துவமனையில் இதற்குண்டான இடம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. எனவே அதைப் பரிசீலித்துத்தான் சொல்ல வேண்டும்.

மீனவர்களுக்கு அரசு மானியத்தில் விசைப் படகுகள்.

49—(*வினா எண் 6529) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்பிடிப்பு தொழிலுக்காக தமிழகத்தில் மீனவர்களுக்கு 1982—83, 1983—84, 1984—85 ஆண்டுகளில் எத்தனை விசைப் படகுகள் அரசு மானியத் தொகையில் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) குமரி மாவட்டத்தில் எத்தனை பேருக்கு வழங்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1982-83, 1983-84, 1984-85ஆம் ஆண்டுகளில் கண்ணாடி நாரிழைப் படகுகள் உட்பட 64 விசைப் படகுகள் பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டன.

(ஆ) கன்னியாகுமரி உற்பத்தி மற்றும் விற்பனை மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு இரண்டு படகுகள் 1982-83ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று ஆண்டுகளில் 64 விசைப் படகுகள் வழங்கியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தெந்த அடிப்படையில் எந்தெந்தத் திட்டங்களின் கீழ் இந்த விசைப்படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 29 விசைப்படகுகளும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியின் மூலம் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு 35 விசைப்படகுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மானியத்தில் வழங்கப்படக்கூடிய அந்த விசைப்படகுகள், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக எண்ணிக்கையில் மிகவும் குறை